வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 16.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- பூஜ்யம் சதவிகித கார்பன் வெளியீடு, மற்றும், பசுமை வளர்ச்சி தொடர்பான இலக்குகளை எட்ட இந்தியா உறுதி பூண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- இன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில், புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான, 4ஆவது ரீ-இன்வெஸ்ட் உலக மாநாட்டையும், மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் பிரதமர் தொடக்கி வைத்தார்.
- கடல்சார் வர்த்தகத்தின் முக்கிய கேந்திரமாகத் தமிழகம் மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மிலாது நபி திருநாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்திப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர், மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

--------------------------

<u>*மோடி-குஜராத்* 1 (20)</u>

பூஜ்யம் சதவிகித கார்பன் வெளியீடு, மற்றும், பசுமை வளர்ச்சி தொடர்பான இலக்குகளை எட்ட இந்தியா உறுதி பூண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில், புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான, 4ஆவது ரீ-இன்வெஸ்ட் உலக மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர். இந்தியா வளரும் நாடாக உள்ள போதிலும், பருவநிலை மாற்றத்தின் கட்டப்பாடு தொடர்பாக, 9 ஆண்டுகளுக்கு முன்னர், பாரிசில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை, திட்டமிட்ட காலத்திற்கு முன்பாகவே

எட்டி இருப்பதாகக் கூறினார். பசுமை எரிசக்திக்கு மாறுவதை, இந்தியா, மக்கள் இயக்கமாகவே மாற்றிஇருப்பதாக அவர் தெரிவித்தார்.

விழாவின் போது, பிரதமரின் சூர்ய வீடு-இலவச மின்சாரத் திட்டத்தையும், பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். இத்திட்டத்தினால், இந்தியாவில் ஒவ்வொரு வீடும், மின்சாரம் உற்பத்தி செய்யும் இடமாக மாறும் என்றும் அவர் கூறினார். இத்திட்டத்தின் கீழ், வீடுகளின் மேற்கூரையில் சோலார் மின் உற்பத்தி வசதிகளை நிறுவ, 1 கோடி பேர் பதிவு பெற்றுள்ளதாகவும், 3 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில், இந்த வசதி ஏற்கனவே நிறுவப் பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையில், பயிற்சி பெற்ற திறன்களுக்கான தேவையும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளும் அதிகம் இருப்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

<u>மோடி-குஜராத் 2 (17)</u>

பருவநிலைக்கு ஏற்ற கொள்கைகளே, இந்தியா மேற்கொண்டுள்ள உறுதிப்பாட்டின் மையப் பகுதி என்றும், சுற்றுச் சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை பற்றிய LiFE இயக்கம், மறுசுழற்சிப் பொருளாதார அணுகுமுறை ஆகியன இதில் அடங்கும் என்றும், பிரதமர் தெரிவித்தார். நாட்டின் 17 நகரங்களை, சோலார் நகரங்களாக மேம்படுத்துவதற்கான அரசின் திட்டங்களையும் பிரதமர் வெளியிட்டார்.

ரீ-இன்வெஸ்ட் மாநாட்டில் கலந்து கொள்ளும் உலகப் பிரதிநிதிகள், மற்றும், சம்பந்தப்பட்ட இதர தரப்பினர், இந்தியாவின் வளர்ந்து வரும் பசுமை எரிசக்தித் துறையில் அதிக முதலீடு செய்ய வேண்டும் என, பிரதமர் அழைப்பு விடுத்தார். பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட தூய எரிபொருள் உற்பத்தியில், இந்தியா கடந்த 10 ஆண்டுகளில் எட்டி உள்ள சாதனைகளையும் அவர் கோடிட்டு காட்டினார்.

புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, இந்நிகழ்ச்சயில் பேசுகையில், புதுப்பிக்கவல்ல

எரிசக்தித் துறையில் இந்தியா, 86 சதவிகித வளர்ச்சிக் கண்டுள்ளதாக தெரிவித்தார். குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் உட்பட பலர், தொடக்க விழாவில் பங்கேற்றனர்.

*__மோடி-குஜராத்__* __3 (5)__

புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையில், இந்திய எட்டி உள்ள வளர்ச்சியை எடுத்துக் காட்டும் வகையிலான இந்த 3 நாள் ரீ-இன்வெஸ்ட் மாநாடு மற்றும் கண்காட்சியில், 140 நாடுகளில் இருந்து, சுமார் 10 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். பசுமை எரிசக்தி, மற்றும், எதிர்கால எரிசக்தித் தீர்வுகள் குறித்து, 40க்கும் மேற்பட்ட விவாத அரங்குகள் இதில் இடம்பெறுகின்றன.

--------------------------

*__மோடி-ரயில் 1 (15)__*

பிரதமர் திரு.நரேந்திர மோடி இன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில், 2ஆம் கட்ட அகமதாபாத் மெட்ரோ ரயில் திட்டத்தை, செக்டார்-ஒன் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து கொடியசைத்து தொடக்கி வைத்தார். செக்டார்-ஒன் ரயில் நிலையம் முதல், கிஃப்ட் சிட்டி ரயில் நிலையம் வரை, அவர் மெட்ரோ ரயிலில் பயணித்தார்.

மெட்ரோ ரயில் தொடக்க விழாவை தொடர்ந்து, அகமதாபாத் GMDC மைதானத்தில் நடைபெற்ற விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாயாகும்.

இன்று, பிரதமர் தொடக்கி வைத்த திட்டங்களில், அகமதாபாத், மற்றும் பூஜ் நகரங்களுக்கு இடையிலான நாட்டின் முதலாவது நமோ பாரத் துரித ரயிலும், நாக்பூர்-செகந்திராபாத், கோலாப்பூர்-பூனே, துர்க்-விசாகப்பட்டினம் உள்ளிட்ட வந்தே பாரத் ரயில்களும், வாரணாசிக்கும்,

டெல்லிக்கும் இடையே, 20 பெட்டிகளுடன் இயங்கக் கூடிய நாட்டின் முதலாவது வந்தே பாரத் ரயிலும் அடங்கும்.

*மோடி-ரயில் 2 (5)*

விழாவின் போது, பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித் திட்டப் பயனாளிகள் 30 ஆயிரம் பேருக்கு, வீடு கட்டிக் கொள்வதற்கான அனுமதி ஆணைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்கினார். இதற்கான முதல் தவணை மானிய உதவிகளை அவர் விடுவித்து, வீடு கட்டும் பணிகளையும் அவர் தொடக்கி வைத்தார்.

-------------------------

*தூத்துக்குடி 1* (17)

தமிழகம், 3 பெரிய துறைமுகங்கள், மற்றும், இதர 17 துறைமுகங்களுடன், கடல்சார் வர்த்தகத்தின் முக்கிய கேந்திரமாக மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். தூத்துக்குடி துறைமுகத்தில் இன்று நடைபெற்ற, 9ஆவது சரக்கு பெட்டக முனையத்தின் திறப்பு விழாவில், வீடியோப் பதிவு மூலம் உரையாற்றிய அவர், துறைமுகங்கள் மூலமான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், தூத்துக்குடி துறைமுகத்தில், புறநிலை சரக்குப் பெட்டக முனையம் ஒன்றை அமைக்க, 7 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப் படுவதாக தெரிவித்தார். உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்கு அப்பாற்பட்டு, முற்போக்கு சிந்தனையுடன் கூடிய, நீடித்த வளர்ச்சிக்கான பாதையை, இந்தியா, உலகிற்கு காட்டி வருவதாக தெரிவித்த அவர், இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில், ஒத்துழைப்பு அணுகுமுறையும், புதுமைப் படைப்புகளுமே, பெரிய பலம் என்றார்.

ஆண்டுக்கு 6 லட்சம் சரக்குப் பெட்டகங்களை கையாளும் திறன் கொண்ட, தூத்துக்குடி துறைமுகத்தின் புதிய முனையம், 400 கோடி ரூபாய் செலவில், அமைக்கப் பட்டுள்ளதாக, மத்திய கப்பல் மற்றும் துறைமுகத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் இந்நிகழ்ச்சியில்

தூத்துக்குடி 2 (7)

பேசுகையில் கூறினார். ட்ரோன் கண்காணிப்பு மையம், சூர்ய சக்தி மின் உற்பத்தி நிலையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளையும், துறைமுகத்தின் பயன்பாட்டிற்கு, அவர் அர்ப்பணித்து வைத்தார்.

மத்திய துறைமுகத் துறை இணையமைச்சர் திரு. சந்தனு தாக்கூர், இந்நிகழ்ச்சியில் பேசுகையில், திறம்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில், கதி சக்தி, மற்றும் சாகர் மாலா திட்டங்களை அரசு அமல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

--------------------------

மோடி-வாழ்த்து (18)

மிலாது நபி திருநாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்திப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர், முஸ்லீம் சமூகத்தினர் உட்பட மக்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அன்பு மற்றும் சகோதர உணர்வை வலுப்படுத்திக் கொள்ள, முகமது நபிகள், மக்கள் அனைவரையும் ஊக்கப்படுத்தியதாகவும், சமூகத்தில், சமத்துவம், மற்றும் நல்லிணக்கத்தை அவர் வலியுறுத்தியதாகவும், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். திருக்குரானின் போதனைகளை அனைவரும் உள்வாங்கிக் கொண்டு, அமைதியான சமுதாயத்தை உருவாக்க, உறுதியேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமைதி, நீதி, தன்னடக்கம் உள்ளிட்ட நபிகள் பெருமானின் போதனைகளை மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையுடன் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும் என, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். இரக்கம் மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்தை உயர்த்திப் பிடிப்பதில், நபிகள் பெருமானின் போதனைகள், மனிதகுலத்திற்கு தொடர்ந்து வழிகாட்டும் என தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

*__மோடி-வாழ்த்து 2 (4)__*

ஒற்றுமையும், நல்லிணக்கமும் எப்போதும் நிலவட்டும் என்றும், மகிழ்ச்சியும், வளமும் எல்லா இடங்களிலும் பெருகட்டும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள, மிலாது நபி வாழ்த்துச் செய்தியில் கூறியள்ளார்.

--------------------------

*__வாழ்த்து-சேர்க்கை__* __(11)__

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், மனித சமுதாயத்திற்கு, அன்பு, இரக்கம், மற்றும், மனித நேயத்தை போதித்தவர் நபிகள் நாயகம் என்றும், சமத்துவ சமுதாயத்தை வலியுறுத்திய நபிகள் நாயகத்தின் பிறந்த நாளில், அன்னாரின் போதனைகளை அனைவரும் ஏற்று, மனிதநேயம் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து காட்ட, உறுதியேற்போமாக என்று கூறியுள்ளார். மக்களை உயர்ந்த சமுதாயமாக மாற்றும் லட்சியத்துடன் நபிகள் நாயகம் மக்களுக்கு வழங்கிய போதனைகள் கருத்தாழம் மிக்கவை என்றும், இந்த போதனைகளை நெஞ்சில் நிறுத்தி, அன்பு, கருணை, மற்றும் சமரச உலகை உருவாக்க, அனைவரும் உறுதியேற்போம் என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

--------------------------

*__ரங்கசாமி – மோடி வாழ்த்து__* __(13)__

புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து கடிதம் எழுதி உள்ளார். நாட்டு மக்கள் மீதும், நாட்டு மக்களின் நலன் மீதும், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்குள்ள உறுதிப்பாடும், அர்ப்பணிப்பு உணர்வும், போற்றத்தக்கவை என்று அவர் கூறியுள்ளார். பெரிய அளவிலான மாற்றங்களுக்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலை நோக்குப் பார்வை மற்றும் அவரது சீரிய தலைமையினால், நாடு, புகழின் புதிய உச்சங்களை எட்டி இருப்பதில், எந்த சந்தேகமும் இல்லை என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு புதிய திசைகள், மற்றும் நம்பிக்கைகளைக் காட்டிய வண்ணம், பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்னும் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்ந்திருந்து, உலக அளவில் இந்தியாவை மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என, சொந்த முறையிலும், புதுச்சேரி மக்கள் சார்பிலும் தாம் வாழ்த்துவதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

---------------------------

*__நீர்வள வாரம்__* __(18)__

8ஆவது இந்திய நீர் வள வாரம், நாளை தொடங்க உள்ளது. இதுதொடர்பாக புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நாளை நடைபெற உள்ள விழாவை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடக்கி வைக்கிறார். இந்த 4 நாள் நிகழ்ச்சியில், 40 நாடுகளைச் சேர்ந்த 200 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உட்பட, மொத்தம் சுமார் 400 பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். விழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப் பட்டுள்ள கண்காட்சியில், 400க்கும் மேற்பட்ட அமைப்புகள், மற்றும், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், நீர்வளத் துறை தொடர்பான தங்களின் புதுமைப் படைப்புகளை காட்சிக்கு வைத்துள்ளன. இவ்விழா குறித்து, மத்திய ஜல் சக்தி அமைச்சக செயலர் திருமதி தேபஸ்ரீ முகர்ஜி, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், திறம்பட்ட நீர் நிர்வாகத்தினால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும் என்றார். நீர்வளத் துறையில் உலக அளவில் சிறந்து விளங்கும் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், புதுமைப் படைப்பாளர்கள், மற்றும், கொள்கை வகுப்பாளர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பாக, இந்நிகழ்ச்சி அமையும் என்றும், அவர் கூறினார். அனைவருக்குமான நீர்வள மேம்பாடு, மற்றும், நிர்வாகத்தில், கூட்டாண்மையும், ஒத்துழைப்பும் என்ற கருப்பொருள் அடிப்படையில், இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

---------------------------

**_திரைப்பட தணிக்கை_** (10)

மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்திடம், தணிக்கைக்கு வரும் திரைப்படங்கள், செவித் திறன், மற்றும் பார்வைத் திறன் குறைபாடு உள்ளவர்களின் தேவைகளுக்கு ஏற்ற, ஒருசில அம்சங்களையேனும் கொண்டதாக இருப்பதை உறுதிப்படுத்தும் வசதிகளை, வாரியம் தனது இ-பிரமாண் இணைய தளத்தில், திட்டமிட்ட தேதியான செப்டம்பர் 15, அதாவது, நேற்று முதல் வெற்றிகரமாக செயல்படுத்தி உள்ளது. இனி, திரைப்பட தயாரிப்பாளர்கள், செவித் திறன், மற்றும் பார்வைத் திறன் குறைபாடு உள்ளவர்களின் தேவைகளுக்கு ஏற்ற அம்சங்கள் அடங்கிய தங்களின் திரைப்படங்களை எளிதான முறையில் தணிக்கைக்கு சமர்ப்பிக்க முடியும் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-------------------------

**_உத்தராகண்ட் யாத்திரிகர்_** (15)

உத்தராகண்ட் மாநிலம் பித்ரோகார் மாவட்டத்தில், மழை மற்றும் மண் சரிவு காரணமாக, ஆதி கைலாஷ் யாத்திரைப் பாதையில் பல்வேறு இடங்களில் சிக்கி இருந்த யாத்திரிகர்கள், பாதுகாப்பாக மீட்கப் பட்டுள்ளனர். ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்ட இவர்கள், தர்ச்சுலா ராணுவ ஹெலிகாப்டர் தளத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இதற்கென தர்ச்சுலாவில் இருந்து, 16 முறை ஹெலிகாப்டர் இயக்கப் பட்டதாகவும், பூடி, கேலா, சிர்க்கா உள்ளிட்ட இடங்களில் இருந்து மொத்தம் 63 பேர் மீட்கப் பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்களில் 46 பேர், பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்திருந்த ஆதி கைலாஷ் யாத்திரிகர்கள் என்றும், 17 பேர், மலைப் பகுதி கிராமங்களில் வசிப்பவர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. உயரமான மலைப் பகுதி கிராமங்களில் ஆபத்தான இடங்களில் வசிக்கும் மக்களை, பாதுகாப்பாக மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மழை மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட ஆதி கைலாஷ் யாத்திரைப் பாதை, அடுத்த 2-3

நாட்களில் மீண்டும் செயல்பட தொடங்கும் என்றும், உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

--------------------------

***அடையாளம்* (11)**

ஸ்டாஃப் செலக்க்ஷன் கமிஷன் என்னும் பணியாளர் தேர்வாணையம் மூலமான ஆள் சேர்ப்புப் பணிகளின் போது, பதிவு முதல், தேர்வு வரையிலான பல்வேறு நிலைகளில், தேர்வர்களின் அடையாளத்தை, தன்னார்வ அடிப்படையில் ஆதார் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள, மத்திய அரசு, ஆணையத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இதில், சம்பந்தப்பட்ட சட்டங்களையும், இந்திய தனி அடையாள ஆணையத்தின் விதிமுறைகளையும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற, தேர்வர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக தகவல் வெளியானதை தொடர்ந்து, மத்திய பணியாளர் துறை அமைச்சகம் இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளது.

--------------------------